**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 03.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண்கள். SA 9901/SCIC/2023, SA 2024/SCIC/2023, SA 5955/SCIC/2023 SA 170/SCIC/2023, SA 3484/SCIC/2023, SA 11407/SCIC/2023, SA 15396/SCIC/2023 & SA 14686/SCIC/2023**

திரு.கணேசன்.S — மேல்முறையீட்டாளர்
எண்.5/12, 2வது தெரு
ஸ்ரீ பால விநாயகர் நகர்
அரும்பாக்கம், சென்னை - 600 106.

/எதிர்/

1.பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர்
தூத்துக்குடி பதிவு மாவட்டம்
தூத்துக்குடி
2.பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர்
சார் பதிவாளர் அலுவலகம்
புதூர், தூத்துக்குடி மாவட்டம், .... பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வழக்கின் விசாரணை ஏற்கெனவே 15/04/2025 அன்று ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பித்திருந்தது.

> **19. மேற்குறிப்பிட்ட 8 (எட்டு) வழக்குகளும் ஒரே பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டதாக உள்ளதாலும், இதை மனுதாரரும் ஒப்புக் கொண்டதாலும் இவையனைத்தையும் ஒருங்கியலாக விசாரணை செய்ய ஆணையம் முடிவு செய்தது. இன்றைய விசாரணைக்கு, மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில்,**

திரு.க.அசோகன், மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), தூத்துக்குடி பதிவு மாவட்டம் மற்றும் திரு.ந.வேலு, சார்பதிவாளர் (பொ), புதூர் சார்பதிவகம், தூத்துக்குடி மாவட்டம் ஆகியோர் ஆஜரானார்கள்.

20. இன்றைய விசாரணையின் போது, மனுதாரரின் முக்கிய புகாராக, 1 ஏக்கர் 15 சென்ட் பரப்பளவு கொண்ட அரசு நிலத்தை ஆவண எண்.1331/1974 வாயிலாக எவ்வித புல எண்ணையும் குறிப்பிடாமல் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அதுகுறித்த தகவல் கோரியே, தான் தகவல் அறியும் உரிமைச் சட்டம்-2005-ன் கீழ் மனுக்கள் தாக்கல் செய்துள்ளதாகத் தெரிவித்தார். அதற்கு பொதுத் தகவல் அலுவலர், தகவல் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மேலும், பொதுத் தகவல் அலுவலர்/மாவட்டப் பதிவாளர், தூத்துக்குடி அவர்கள் வழக்கு எண்.170/SCIC/-க்கு வழங்கிய தகவலில், அவ்வாறு எந்த ஒரு அரசு நிலமும் தனிநபர்கள் பெயரில் பதிவு செய்யப்படமாட்டாது என்றும் புல எண். குறிப்பிடப்படாமல் எவ்வித ஆவணமும் பதிவு செய்ய அனுமதிக்கப்படாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். ஆனால் மனுதாரர் புகார் தெரிவித்தவாறு மேற்குறிப்பிட்ட அரசு நிலத்திற்கான ஆவணம் ஒரு தனி நபரால் மற்றொரு தனி நபருக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார். மேலும், இன்றைய விசாரணையின் போது ஆஜரான பொதுத் தகவல் அலுவலர்கள்/ மாவட்டப்பதிவாளர், தூத்துக்குடி மாவட்டம், சார்பதிவாளர் (பொ), புதூர் சார்பதிவகம் ஆகியோர் மனுதாரர் குறிப்பிட்டவாறான ஆவண எண்.1331/1974 ஐ ஆணையத்தின் முன் சமர்ப்பித்து, அந்த ஆவணத்தில் எவ்வித புல எண்ணும் குறிப்பிடப்படவில்லை என்றும் இருப்பினும் அந்த ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை ஒப்புக் கொண்டனர்.

21. எனவே, மாவட்டப் பதிவாளர், தூத்துக்குடி அவர்கள் இந்தப் பிரச்சினை தொடர்பாக தனிப்பட்ட முறையில் ஒரு முழுமையான விசாரணையை மேற்கொள்வதோடு, விளாத்திகுளம் வட்டாட்சியரை, அவ்விசாரணைக்கு உதவியாக புல எண். உள்ளிட்ட வருவாய்த்துறை விவரங்கள் மற்றும் ஆவணங்களை சரியான முறையில் இனம் காண ஏதுவாக பயன்படுத்திக் கொள்ளுமாறும், அவ்விசாரணை அறிக்கையினை 03/06/2025 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்றும் ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. வருவாய் வட்டாட்சியர், விளாத்திகுளம் வட்டம் அவர்கள், மாவட்டப் பதிவாளர், தூத்துக்குடி அவர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்வதோடு, கோருகின்ற ஆவணங்களின் நகல்களை அளிக்குமாறு ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.

மேலும், மாவட்டப் பதிவாளர், தூத்துக்குடி மற்றும் வருவாய் வட்டாட்சியர், விளாத்திகுளம் வட்டம் ஆகியோர் 03/06/2025 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி நடவடிக்கை எடுத்த அறிக்கையினை சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. ஆணையத்தின் அழைப்பாணை (1) மனுதாரர், (2) மாவட்டப் பதிவாளர், தூத்துக்குடி, (3) சார்பதிவாளர், புத்தூர் சார்பதிவகம், (4) வருவாய் வட்டாட்சியர், விளாத்திகுளம் வட்டம் ஆகியோருக்கு அழைப்பாணைகள் அனுப்பப்பட வேண்டும். இவ்வழக்கு ஆணையத்தால் 03/06/2025-க்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்டவாறு இன்று விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், மாவட்டப் பதிவாளர், தூத்துக்குடி சார்பில் (1) திரு.வ.கு.தனசேகரன், 2எண். இணை சார்பதிவாளர், மாவட்டப் பதிவாளர் அலுவலகம், தூத்துக்குடி (2)திரு.ந.வேலு, சார்பதிவாளர், புதூர் சார்பதிவகம், தூத்துக்குடி மாவட்டம் மற்றும்

(3) **திரு.த.ராமகிருஷ்ணன், வட்டாட்சியர், விளாத்திகுளம் வட்டம் ஆகியோர் ஆஜரானார்கள். இன்று மாவட்டப் பதிவாளர், தூத்துக்குடி அவர்களின் சார்பில் ஆஜரான சார்பதிவாளர், மாவட்டப் பதிவாளரின், மனுதாரரின் புகார் குறித்து, வட்டாட்சியரிடம் அறிக்கை கோரி அனுப்பப்பட்ட சுருக்கமான அறிக்கையினை சமர்ப்பித்தார். அதற்கு வட்டாட்சியர், விளாத்திகுளம் அவர்களும் இது தொடர்பான அறிக்கை ஒன்றினையும் அனுப்பியுள்ளார். அவ்வறிக்கை 26/05/2025 அன்று பெறப்பட்டுள்ளது. மேலும், 09.06.2025 அன்றைய விசாரணைக்கு ஆஜராகக் கோரி மனுதாரர், ஆவணத்தை பதிவு செய்தவர்கள், சாட்சிகள் ஆகியோருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டிருப்பதாகவும், விசாரணை முடித்து அறிக்கை சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவித்ததோடு, இத்தகைய நடவடிக்கைகள் முடித்து அறிக்கை தாக்கல் செய்ய ஆணையத்திடம் கால அவகாசம் கோரினார். மேலும், 09/06/2025 அன்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர், உள்ளூர் விடுமுறை அறிவித்துள்ளதால், மேற்குறிப்பிட்ட விசாரணையினை பிறிதொரு தேதிக்கு ஒத்தி வைத்து நடத்த வேண்டுமென்றும் கூறினார். ஆணையம் கால அவகாசம் வழங்கியதோடு, பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டப் பதிவாளர், தூத்துக்குடி அவர்கள் விசாரணை நடவடிக்கையினை முடித்து அதன் முழுமையான அறிக்கையினை 03/07/2025 அன்று பிற்பகல் ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. மேலும், 03/07/2025 அன்று மாவட்டப் பதிவாளர், தூத்துக்குடி அவர்கள் கண்டிப்பாக ஆணையத்தில் ஆஜராக வேண்டுமென்றும் ஆணையம் உத்தரவிடுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**
**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

## <u>வழக்கு எண்கள். SA 9901/SCIC/2023, SA 2024/SCIC/2023, SA 5955/SCIC/2023 SA 170/SCIC/2023, SA 3484/SCIC/2023, SA 11407/SCIC/2023, SA 15396/SCIC/2023 & SA 14686/SCIC/2023</u>

**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**
1.பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர்
தூத்துக்குடி பதிவு மாவட்டம்
தூத்துக்குடி

27

2.பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர்
சார் பதிவாளர் அலுவலகம்
புதூர், தூத்துக்குடி மாவட்டம்,

3. பொதுத் தகவல் அலுவலர்/
வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
விளாத்திகுளம் வட்டம்.

**மேல்முறையீட்டாளர்**

திரு.கணேசன்.S
எண்.5/12, 2வது தெரு
ஸ்ரீ பால விநாயகர் நகர்
அரும்பாக்கம், சென்னை - 600 106.

RG/PC